**கவனிக்க.**-2021.06.04 ஆந் திகதிய 2231 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III, பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2232 - 2021 ජූනි මස 11 වැනි සිකුරාදා - 2021.06.11

*2232 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1284 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, யூலை மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூன் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1281-B 82238-5,403 (2021/ 06)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

*கிராம அலுவலர் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2020 (2021)*

*2020 (2021) தேர்வு அறிவிப்பு தொடர்பாக 2021.05.28 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசின் 2,230 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கிராம அலுவலர் தரம் III க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை.*

*02. கூறப்பட்ட அறிவிப்பின் படி 9.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 2021.07.19 ஆக நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் 6 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்யவேண்டிய திகதியான 2021.06.28 மாறாமல் உள்ளது.*

*03. மேலும் இந்த பரீட்சைக்கு இணையத்தளத்தில் விண்ணப்பிக்கத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. அதற்காக* www.doenets.lk *என்ற வலைத்தளத்தில் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் இவ் வலைத்தளத்தினை பார்வையிட்டு அங்குள்ள வழிமுறைகளைப் பின்பற்றி விண்ணப்பிக்க நடவடிக்கை எடுக்கவும்.*

*04. இந்தப் பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகள் மீண்டும் விண்ணப்பிப்பதனை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.*

*என். எச். எம். சித்ரானந்த,*
*செயலாளர்,*
*உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு.*

*உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,*
*"நில மெதுர", எல்விட்டிகல மாவத்தை,*
*கொழும்பு 05.*
*2021, யூன் 04.*

*06-240*

---

**உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

*திறமை அடிப்படையில் கிராம அலுவலர் சேவையின் அதிஉயர் தரத்துக்கு பதவியுயர்விற்கான போட்டிப் பரீட்சை - 2021*

Competitive Examination for Promotion to Supra Grade of Grama Niladhari on Merit Basis - 2021

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம் கிராம அலுவலர் சேவைக்கு உரித்தான பின்வரும் 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய கிராம அலுவலர்கள், அச்சேவையின் அதியுயர் தரத்துக்கு திறமை அடிப்படையில் பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறித்த பரீட்சை 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதோடு, பரீட்சை நிலையங்கள் மற்றும் பரீட்சை நிலைய எண் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல், அட்டவணை இலக்கம் 01 ஆகவும், மாவட்ட இலக்கப் பட்டியல், அட்டவணை இலக்கம் 02 ஆகவும், இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.*

**பதவியுயர்த்தப்படும் விதிமுறைகள்.**- *எழுத்துப் போட்டிப் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது மூப்புநிலை மற்றும் திறமையினனை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் புள்ளிகளின் மொத்த ஒழுங்கிற்கு ஏற்ப திறமை அடிப்படையில் நிரப்பப்படவேண்டிய நிருவாக கிராம அலுவலர்கள் பதவியின் 71 வெற்றிடங்களுக்காக இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.*

02. **பதவியுயர்த்தப்படும் முறை :**

(i) இப்பரீட்சை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்குப் பதிலாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதோடு, பரீட்சையின் புள்ளிகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூவர் அடங்கிய நேர்முகப் பரீட்சைக் குழுவினால், சேவை மூப்புநிலை மற்றும் திறமைகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் புள்ளிகளின் மொத்த ஒழுங்குக்கு ஏற்ப முன்னுரிமை தீர்மானிக்கப்படும்.

(ii) எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தயாரிக்கப்படுகின்ற முன்னுரிமைப் பட்டியலில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகுதியானவர்கள் இருப்பார்கள்.

(iii) அதியுயர் தரத்துக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் சேவை நிலையங்களில் இணைக்கப்படும் போது முதலில் நிலவிய வெற்றிடங்களுக்கு இடமாற்றங்களின் மூலம் தற்போதுள்ள அலுவலர்களுக்கு, இடமாற்றத்திற்கான வாய்ப்பு வழங்கப்படும் என்பதோடு, இடமாற்றம் வழங்கப்பட்டதன் பின்னர், மாவட்டத்தினுள் நிலவும் மீதமுள்ள வெற்றிடங்களில் 60% இற்காக பரீட்சையின் போது சேவை மூப்பு நிலையின் அடிப்படையில் கடமையாற்றும் பிரதேச செயலகப் பிரிவிற்கு வெளியே அமைந்த மாவட்டத்தினுள் மற்றொரு பிரதேச செயலகப் பிரிவில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதோடு, மாவட்டத்தினுள் நிலவுகின்ற அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடக் கூடுதலான அளவு தகைமை பெற்றுள்ள சந்தர்ப்பத்தில், அவர்களை மாவட்டத்துக்கு வெளியே உள்ள வெற்றிடங்களுக்கு இணைத்துக்கொள்ளப்படுவார்கள். அவ்வாறு இணைக்கப்படும் சேவை நிலையங்களில் நியமனங்களை பொறுப்பேற்காதவர்களின் நியமனங்கள் இரத்துச் செய்யப்படும் என்பதோடு, அவ்வாறனவர்களுக்கு ஒருவருக்குப் பின்னைய காலங்களில் இந்நியமனத்துக்காக, இப்பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் கோருவதற்கு உரித்துடமை காணப்படுவதில்லை.

(iv) இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடைபெறும் என்பதோடு, விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3. (i) **பரீட்சை நடைமுறை**.- விண்ணப்பதாரியின் உளச்சார்பு மற்றும் விடய அறிவு தொடர்பான பாடங்களுக்கு விண்ணப்பதாரி தோற்றுதல் வேண்டும். இவ்வினாப்பத்திரம் 1 ½ மணித்தியாலங்களைக் கொணடது என்பதுடன், தகைமை பெறுவதற்குக் குறைந்தபட்சம் மொத்தப் புள்ளிகள் 100 இல் 40 இனைப் பெறுதல் வேண்டும்.

(ii) **பாடத் திட்டம்**.- அலுவலக நிருவாகம் மற்றும் கிராம அலுவலர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கோள்ளும் போது அவசியப்படும் பொது அறிவு, முடிவெடுக்கும் திறன், தர்க்க ரீதியாக விடயங்கள் அணுகல் மற்றும் அலுவலக நிருவாகம் தொடர்பான அறிவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

4. **சேவை மூப்புநிலை மற்றும் திறனை அளவிடுவதற்கான புள்ளி வழங்கும் துறைகள் :**

(i) சேவை மூப்புநிலை அதிகபட்சம் 60 புள்ளிகள்
(அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை 01/ 2019 இற்கு ஏற்ப சேவை மூப்புநிலைக்கு புள்ளிகள் வழங்கப்படும்)

(ii) திறமை (1 ஆந் தரத்துக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர்) அதிகபட்சம் 35 புள்ளிகள்

(ii-i) கிடைக்கப்பெற்றுள்ள பாராட்டுகளுக்காக அதிகபட்சம் 15 புள்ளிகள்
பொது மாதிரிப்படிவம் 230பீ , இன் மூலம் பெறப்பட்ட பாராட்டுக்கள், ஒரு சான்றிதழுக்கு 3 புள்ளிகள் வீதம் மற்றும் 230 பீ மாதிரிப் படிவத்துக்கு புறம்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட பாராட்டுக்கள், ஒரு சான்றிதழுக்கு 01 புள்ளி வீதமும் வழங்கப்படும்.

(ii-ii) கிராம அலுவலர் அலுவலக முகாமைத்துவப் போட்டியில் கிடைக்கப்பெற்ற வெற்றிகளுக்கு

அதிகபட்சம் 20 புள்ளிகள்

- அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம் 15 புள்ளிகள்
- அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடம் 12 புள்ளிகள்
- அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடம் 10 புள்ளிகள்
- மாவட்டப் போட்டியில் முதலாம் இடம் 08 புள்ளிகள்
- மாவட்டப் போட்டியில் இரண்டாம் இடம் 06 புள்ளிகள்
- மாவட்டப் போட்டியில் மூன்றாம் இடம் 04 புள்ளிகள்
- பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் முதலாம் இடம் 03 புள்ளிகள்
- பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் இரண்டாம் இடம் 02 புள்ளிகள்
- பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் மூன்றாம் இடம் 01 புள்ளி

(ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு மட்டத்தில் பெற்ற வெற்றிகளாக இருந்தாலும், அவற்றில் உயர் வெற்றிக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.)

(iii) நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறன்களுக்கு அதிகபட்சம் 05 புள்ளிகள்

5. **தகைமைகள்**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளை முழுமைப்படுத்தியிருத்தல் வேண்டும் :

(i) கிராம அலுவலர் I ஆம் தரத்தில் 5 வருட முனைப்பானதும், திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் I ஆம் தரத்துடைய வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் அல்லது அவ்வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக அரச சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை 03/2016 இன் கீழ் சலுகைக் காலத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

(ii) இறுதி 05 வருடங்களில் சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல் வேண்டும்.

6. **சம்பள முறை** :

(i) சம்பளக் குறியீட்டு இலக்கம்: MN7 - 2016 (ரூ. 41,580 - 11 × 755 - 18 × 1,030 - ரூபா 68,425) - 2 ஆம் படிநிலையில் (இச்சம்பள அளவுத்திட்டத்திற்கமைய சம்பளத் தயாரிப்பு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதிய ஏற்பாடுகள் இதற்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படும்.)

(ii) I ஆந் தரத்தில் வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடையாத அலுவலர்களுக்கு அதில் சித்தியெய்துவதற்கு விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி முதல் ஒரு வருடம் வரை சலுகைக் காலமாக வழங்கப்படும்.

7. **விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்**.- (i) இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம், இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திருக்கும் வகையில் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை தயாரித்துக் கொள்வது அவசியமாகும். விண்ணப்பங்கள் A4 தாளின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்துக் கொள்ளல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 05 வரை அதன் முதல் பக்கத்திலும், மீதமுள்ள பகுதிகளை அடுத்துவரும் பக்கங்களிலும் அமையும் வகையில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் கணனியினால் தயாரிக்க முடியும் என்பதோடு, விண்ணப்பதாரிகள் தங்களது சொந்த கையெழுத்தில் இங்கு காட்டப்பட்டுள்ள அறிவுத்தல்களின் படி நிவர்த்தியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(ii) இரண்டு பிரதிகளைக் கொண்டதாக விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துதல் வேண்டும். ஒரு பிரதியை தமது பிரத்தியேகக் கோவையில் சேர்ப்பதற்காகப் பிரதேச செயலாளருக்கும், மற்றைய பிரதி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கும் அனுப்புதல் வேண்டும்.

(iii) சகல பரீட்சார்த்திகளும் தங்களது விண்ணப்பங்களைத் தான் சேவையாற்றும் பிரிவு உள்ளடங்கும் பிரதேச செயலாளர் ஊடாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு. என்ற முகவரிக்கு 2021, யூலை மாதம் 12 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "திறமை அடிப்படையில் கிராம அலுவலர் சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவியுயர்விற்கான போட்டிப் பரீட்சை- 2021" என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(v) விண்ணப்பத்துடன் ஏதேனும் ஆவணங்களோ அல்லது அவற்றின் பிரதிகளையோ இணைத்தல் கூடாது என்றாலும் தாங்கள் குறிப்பிடுகின்ற, அவ்வாறே தங்களின் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில், மாத்திரம் சமர்ப்பிப்பதற்காக தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். பரீட்சைக் கட்டணம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில், நாட்டின் எந்தவொரு தபாலகத்திலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரிலே பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டி, பற்றுச்சீட்டு இலக்கம், திகதி மற்றும் தபாலகம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியைத் தம் வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவ்வாறான விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

9. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

(i) சரியாக விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடைபெறும் திகதியை அறிவித்து அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரத்தை வழங்குதல் வேண்டும். பரீட்சை அனுமதிப் பத்திரம் இன்றிய பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை மண்டபத்தினுள் நுழையவோ பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சார்த்தி ஒருவருக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை கொண்டவர் எனக் கருதப்பட மாட்டார்.

(iii) பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் முன்வைக்கப்படும் சட்டத்திட்டங்களிற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்படுவார்கள். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையளார் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(iv) பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள் அவர்களுக்கு கடமை லீவு வழங்குதல் வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

(v) பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

(vi) **பரீட்சைப் பெறுபேறு**.-
அறிவித்தலின் 03 ஆம் பந்திக்கு ஏற்ப எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகளின் பட்டியல் செயலாளர், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்படும். குறித்த தகைமைகளுக்கான புள்ளிகளைப் பெற்றதன் பின்னர் எழுத்துப் பரீட்சையில் மற்றும் திறமைக்கான புள்ளிகளின் மொத்தப் புள்ளி முன்னுரிமையின் படி தயாரிக்கப்பட்ட இறுதிப் பெறுபேற்று அட்டவணை, செயலாளர், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்படும். உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் அறிவித்தலுக்கமைய பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் தபாலில் அனுப்புவதற்கு அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

10. பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன், அது தொடர்பாக அறிவித்து பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு குறைந்தபட்சம் ஐந்து (05) நாட்களுக்கு முன்னர் தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நிவர்த்தியாகக் குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் பெக்ஸ் ஊடாக பரீட்சை பிரவேசப் பத்திர நிழற் பிரதியொன்றை பெறுவதற்காக விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்தின் ஊடாக பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயன்மிக்கதாகும். (பெக்ஸ் இலக்கம் - 011-2784232) அவ்வாறு வினவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரி நிற்கும்

ஏதேனும் விபரத்தை உறுதிப்படுத்தும் வகையில் தம்வசம் காணப்படும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் விண்ணப்பத்தை தபாலில் இடும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பனவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பது பிரயோசனமாகும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும். இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறன சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக் கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

என். எச். எம். சித்ரானந்த,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு.

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,
"நில மெதுர", எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.
2021, யூன் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

**திறமை அடிப்படையில் கிராம அலுவலர் சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவியுயர்விற்கான போட்டிப் பரீட்சை - 2021**

Competitive Examination for the Promotion to Supra Grade of Grama Niladhari on Merit - 2021 Basis

(இலக்கம் 01 தொடக்கம் 05 வரை அதன் முதற் பக்கத்திலும், இலக்கம் 6 முதல் அடுத்துவரும் பக்கங்களிலும் தயாரித்துக் கொள்ள வேண்டும்.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3

சேவையாற்றும் மாவட்டம் :
(உப அட்டவணை இலக்கம் 2 அமைய உரிய மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

மாவட்ட இலக்கம் :

பரீட்சைக்குத் தோற்றும் நகரம் :

| | |
|---|---|
| 1 | |
| 2 | |

நகர இலக்கம்

| | | |
|---|---|---|
| | | |
| | | |

(அட்டவணை இலக்கம் 01 இற்கமைய நகரம் மற்றும் நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

**1 ஆம் பகுதி**

(**கவனத்திற்கொள்ள வேண்டியவை**.- மாதிரிப் படிவத்தை சரியாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியின் கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும்)

1. (i) முழுப்பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA) :----.
(ii) இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் எழுதுக. (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : GUNAWARDANA, H. M. S. K.) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. (i) அலுவலக முகவரி :----.
(ii) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்தில்) :----.

3. (i) பால்நிலை ஆண்/பெண்
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய கூட்டினுள் இலக்கமிடவும்)
(ii) பிறந்த திகதி :-
ஆண்டு :........................ மாதம் :............................ திகதி :..........................

(iii) தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(iv) தொலைபேசி இலக்கம் கையடக்க :.......................... அலுவலக :......................

4. (i) கடமையாற்றும் பிரதேச செயலகப் பிரிவு : .................................
(ii) கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் : .................................

5.(i) தற்போது வகிக்கும் பதவியேற்ற திகதி / உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட திகதி மற்றும் கடிதம் அனுப்பப்பட்ட இலக்கம் :----.
(ii) சேவைக்காலம் :-
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6. கிராம அலுவலர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட அலுவலராயின், அது தொடர்பான விபரம் :-
(குறித்த பந்தியை மாத்திரம் பூரணப்படுத்தவும்)

(i) விசேட சேவை அலுவலர் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி :----.
சேவைக் காலம் :----.

(ii) சாகுபடி (விவசாய) அலுவலர் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி :----.
சேவைக் காலம் :----.

(iii) விவசாய விரிவாக்கச் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி :----.
சேவைக் காலம் :----.

(iv) அதற்குச் சமமான ஏனைய சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி :----.
சேவைக் காலம் :----.

7. நீங்கள் அரச கரும மொழிக் கொள்கை நோக்கத்தில் பழையவரா அல்லது புதியவரா? :----.

8. (i) சேவைக் காலத்தினுள் சகல சம்பள ஏற்றங்களையும் நீர் உழைத்துள்ளீரா? :----.
(ii) இல்லையெனில் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும் :----.

9. கூட்டுத்தாபனம் அல்லது மற்றொரு சேவைக்குச் சேவை நிமித்தம் நீங்கள் தற்சமயம் விடுவிக்கப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்:----.

10. நீர் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அல்லது மற்றொரு விடயத்துக்காகச் சம்பளமற்ற விடுமுறை பெற்றிருப்பின் அது குறித்த விவரங்களைக் குறிப்பிடவும் :----.

11. உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? அது தொடர்பான விவரங்களைக் குறிப்பிடவும் :----.

**கவனத்திற்கொள்ள வேண்டியவை**.- வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணமாக குறித்த தொகை செலுத்தப்பட்டு தபாலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை இங்கு கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும்.

| பற்றுச்சீட்டு கழராதவாறு இங்கே ஒட்டவும். |
|---|

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
பணம் செலுத்திய தபால் அலுவலகம் :----.
தொகை (ரூபா) :----.
திகதி :----.

…………………. மேற்குறிப்பிட்ட தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும், சரியானதுமென, இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல் பிழையானது என கண்டறியப்பட்டால், இச் சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவியுயர்த்தல் தொடர்பாக எனது உரிமை கவனத்திற் கொள்ளாது விடுவதற்கும், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் முடியுமென நான் அறிந்துள்ளேன். என்பதோடு, அதற்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு நான் உடன்படுகின்றேன். பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் கட்டளைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கும் உடன்படுகின்றேன்.

----,
அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

## II ஆம் பகுதி

## பிரதேச செயலாளரினால் நிரப்பப்படுதல் வேண்டும்

(i) திரு./திருமதி/ செல்வி…………………………………….. இனால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல் அவரின் பிரத்தியேகக் கோவையுடன் ஒப்பிட்டுப் பார்த்து அவை உண்மையானது எனவும் சரியானது எனவும்,

(ii) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும்,

(iii) அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதில்லை எனவும்,

(iv) உடன்முன்னரான ஐந்து வருடங்களினுள் அவரின் சேவை திருப்திகரமானதாக உள்ளதென்றும் ............. ஆந் திகதி முதல் கிராம அலுவலர் 1 ஆம் தரத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இவ் விண்ணப்பத்தின் பிரதிகள் உத்தியோகத்தரின் பிரத்தியேகக் கோவையுடன் இணைக்கப்படுவதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
பிரதேச செயலாளரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
உத்தியோகபூர்வ பதவி முத்திரை :----.
திகதி :----.
(ஏற்புடையதற்ற சொற்களை நீக்கவும்.)

## அட்டவணை - இலக்கம் 01

## பரீட்சை நடாத்தப்படும் நிலையம்

இப்பரீட்சை, கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். குறித்த நகரம் மற்றும் நகர எண் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தில் குறித்த தலைப்பு இந்நகரம் மற்றும் நகர எண் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கு ஏற்ப பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பித்த நகரம் / நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| நகரம் | நகர எண் |
|---|---|
| கொழும்பு | 001 |
| கண்டி | 002 |
| காலி | 003 |
| யாழ்ப்பாணம் | 004 |
| மட்டக்களப்பு | 005 |
| குருநாகல் | 006 |
| அநுராதபுரம் | 007 |
| பதுளை | 008 |
| இரத்தினபுரி | 009 |

மேற்குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு பரீட்சை நிலையத்துக்கு போதுமானளவு பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை காணப்படாதவிடத்து அப்பரீட்சை நிலையத்தை இரத்துச் செய்து விட்டு, அதற்கு கிட்டிய பரீட்சை நிலையத்துக்கு குறித்த விண்ணப்பதாரிகள் அனுப்பப்படுவார்கள்.

மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் அல்லது பரீட்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு போதிய அளவு விண்ணப்பதாரிகள் காணப்படாத விடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**அட்டவணை - இலக்கம் -02**

மாவட்ட இலக்கப் பட்டியல்

| இலக்கம் | மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|---|
| 1 | கொழும்பு | 01 |
| 2 | கம்பஹா | 02 |
| 3 | களுத்துறை | 03 |
| 4 | கண்டி | 04 |
| 5 | மாத்தளை | 05 |
| 6 | நுவரெலியா | 06 |
| 7 | காலி | 07 |
| 8 | மாத்தறை | 08 |
| 9 | அம்பாந்தோட்டை | 09 |
| 10 | யாழ்ப்பாணம் | 10 |
| 11 | மன்னார் | 11 |
| 12 | வவுனியா | 12 |
| 13 | முல்லைத்தீவு | 13 |
| 14 | கிளிநொச்சி | 14 |
| 15 | மட்டக்களப்பு | 15 |
| 16 | அம்பாறை | 16 |
| 17 | திருகோணமலை | 17 |
| 18 | குருநாகல் | 18 |
| 19 | புத்தளம் | 19 |
| 20 | அநுராதபுரம் | 20 |
| 21 | பொலனறுவை | 21 |
| 22 | பதுளை | 22 |
| 23 | மொனராகலை | 23 |
| 24 | இரத்தினபுரி | 24 |
| 25 | கேகாலை | 25 |

06-241/ 1

---

**உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

கிராம அலுவலர் சேவையின் அதிஉயர் தரத்தின் பதவியுயர்விற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021

## Limited Competitive Examination for Promotion to Supra Grade of Grama Niladhari - 2021

2021 ஆம் ஆண்டிற்குரித்தான, மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் கிராம அலுவலர் சேவையின் அதியுயர் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான இவ்வறிவித்தலின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள கிராம அலுவலர் சேவையின் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறித்த பரீட்சை 2021, செத்தெம்பர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதோடு, பரீட்சை நிலையங்கள் மற்றும் பரீட்சை நிலைய எண்

குறிப்பிடப்பிடப்பட்டுள்ள பட்டியல், அட்டவணை இலக்கம் 01 ஆகவும், மாவட்ட இலக்கப் பட்டியல், அட்டவணை இலக்கம் 02 ஆகவும், இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

1. **பதவியுயர்த்தப்படும் முறை :**

(i) மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 48 வெற்றிடங்களை நிரப்ப வேண்டியுள்ளதுடன், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சைக்கு, கீழுள்ள 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் தோற்ற முடியும். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூன்று பேரைக் கொண்ட நேர்முகப் பரீட்சை சபையினால் தகைமைகள் பரீட்சித்து பார்க்கப்படும். நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பதாரிகளை அழைக்கும்போது எழுத்துப் பரீட்சையில் சித்திக்குரிய புள்ளி அளவு அல்லது அதனை விடக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்கிடையே எழுத்துப் பரீட்சையில் காட்டும் திறமைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ள முன்னுரிமைப் பட்டியலின் படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் இணைத்துக் கொள்ளப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் அவ்வெற்றிட எண்ணிக்கையின் 25% ஆன அளவு என்ற இரண்டினதும் கூட்டுத்தொகைக்குச் சமமான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளார்கள்.

(ii) அதியுயர் தரத்துக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள், சேவை நிலையங்களில் இணைக்கப்படும் போது முதலில் நிலவிய வெற்றிடங்களுக்கு இடமாற்றங்களின் மூலம் தற்போதுள்ள அலுவலர்களுக்கு இடமாற்றத்திற்கான வாய்ப்பு வழங்கப்படும் என்பதோடு, இடமாற்றம் வழங்கப்பட்டதன் பின்னர், மாவட்டத்தினுள் நிலவுகின்ற மீதமுள்ள வெற்றிடங்களில் 40% இற்காக பரீட்சையின் போது சேவை மூப்பு நிலையின் அடிப்படையில் கடமையாற்றும் பிரதேச செயலகப் பிரிவிற்கு வெளியே அமைந்த மாவட்டத்தினுள் மற்றொரு பிரிவில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதோடு, மாவட்டத்தினுள் நிலவுகின்ற அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடக் கூடுதலான அளவு தகைமை பெற்றுள்ள சந்தர்ப்பத்தில், அவர்களை மாவட்டத்துக்கு வெளியே உள்ள வெற்றிடங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள். அவ்வாறு இணைக்கப்படும் சேவை நிலையங்களில் நியமனங்களை பொறுப்பேற்காதவர்களின் நியமனங்கள் இரத்துச் செய்யப்படும் என்பதோடு, அவ்வாறானவர்களுக்குப் பின்னைய காலங்களில் இந்நியமனத்துக்காக, இப்பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் கோருவதற்கு உரித்துடமை காணப்படுவதில்லை.

2. **பரீட்சை நடைமுறை**.- விண்ணப்பதாரிகள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடைபெறும் என்பதோடு, விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| | பாடம் | விடயம் இலக்கம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக முறைமை | 01 | 100 புள்ளிகள் | 1 1/2 மணித்தியாலம் |
| 2. | அலுவலகப் பணிகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதி மற்றும் அரச நிதி முகாமை | 02 | 100 புள்ளிகள் | 1 1/2 மணித்தியாலம் |
| 3. | விடயம் சார்ந்த ஆய்வுகள் மற்றும் தொழில்சார் அறிவு | 03 | 100 புள்ளிகள் | 1 1/2 மணித்தியாலம் |
| 4. | பொது வினாப் பத்திரம் | 04 | 100 புள்ளிகள் | 1 1/2 மணித்தியாலம் |

பரீட்சையில் குறைந்தபட்ச தகைமைப் பெறுவதற்கு சகல பாடங்களிலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **பாடத்திட்டம்**.-

(i) அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக முறைமை (பாட இலக்கம் 01)

அலுவலக முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நிறுவனக் கட்டமைப்பு, நிறுவனம் தொடர்பான கோட்பாடுகள், பணிப் பகுப்பாய்வுகள் மற்றும் பணி மதிப்பீடுகள், தலைமைத்துவ மேற்பார்வை மற்றும், முடிவெடுக்கும் திறன், தகவல் தொடர்பு, மக்கள் தொடர்பு ஒருங்கிணைப்பு மற்றும் சிக்கல்களைத் தீர்த்தல் தொடர்பான வினாக்களுக்கு

விடையளித்தல் வேண்டும் என்பதோடு, அலுவலக முறைமைகள் தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகள், அலுவலக நடைமுறைகள், ஆவணங்கள் மற்றும் கோவைப்படுத்தல், மாதிரிப் படிவங்களை நிர்வகித்தல் மற்றும் மாதிரிப் படிவங்களைத் திட்டமிடல், கடிதங்களைப் பரிமாறுதல், அலுவலக உபகரணங்களின் பயன்பாடு பற்றிய கட்டுப்பாடு, அலுவலக தளக்கோலம் மற்றும் சுற்றுப்புறம், தொழில் விபரம், பணி ஆய்வு மற்றும் முறைமை ஆய்வு, பணி அளவீடு, வேலைப் படிமுறைகளைத் தயாரித்தல் உள்ளிட்ட வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(ii) அலுவலகப் பணிகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் அரச நிதி முகாமைத்துவம் (பாட இலக்கம் 02) :

அலுவலகப் பணிகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதிகள் எனும் பகுதியில் அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும்போது பின்பற்றப்பட வேண்டிய செயல் ஒழுங்குகள், அரச அலுவலர்களின் தாபன நடவடிக்கைகள், அரச அலுவலர்களை நியமனம் செய்தல், இடமாற்றம் செய்தல், பதவியுயர்த்தல் மற்றும் சேவையை முடிவுறுத்தல் போன்ற விடயங்களில் அதிகாரங்களை ஒப்படைத்தல், அரசாங்க ஊழியர்களின் ஒழுக்காற்று நடவடிக்கை, நலன்புரி, அரச ஊழியர்களுக்குரிய வரப்பிரசாதங்கள், நிறுவன நடவடிக்கைகள் தொடர்பாக அரச மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலும் வெளியிடப்பட்டுள்ள மற்றும் எதிர்வரும் காலங்களில் வெளியிடப்படவுள்ள விதிமுறைகள், நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் தொடர்பான பொதுவான அறிவுடன் தொடர்புடைய வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் என்பதோடு, அரச நிதி முகாமைத்துவம் குறித்த பகுதியில், வருடாந்த மதிப்பீடுகளையும், கணக்குகளையும் சமர்ப்பிக்கும் அலுவலரின் பொறுப்புக்கள், நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்களை ஒப்படைத்தல், நிதியினைப் பொறுப்பேற்றல், கணக்குப் பதிவும், மீளப் பெறுதலும், செலுத்தல்கள், அரச நிதிப் பொறுப்பு, கட்டுநிதி மற்றும் வங்கிக் கணக்குகள், வழங்கல்களும் சேவைகளும், விலை மனுக் கோரல் செயற்பாடுகள், பொருட்தொகை கணக்கெடுப்பு, கணக்காய்வு விசாரணைகள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் பேரேடுகள், வருமான செலவுச் சுருக்கம், வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டுப் புத்தகங்கள், அரசாங்க நிதிப் பயன்பாடு தொடர்பில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான பொதுவான அறிவு போன்றவற்றை உள்ளடக்கிய வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(iii) விடயம் சார்ந்த ஆய்வுகள் மற்றும் தொழில்சார் அறிவு - (பாட இலக்கம் 03).- கிராம அலுவலர்களுக்கான பல்வேறு கட்டளைச் சட்டங்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் வேறு நியதிச் சட்ட அரச நிறுவனங்களினால் ஒதுக்கப்பட்ட கடமை விடயங்கள் தொடர்பான அறிவை பரீட்சித்துப் பார்க்கப்படும் என்பதோடு, அவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு உரித்தான விடய ஆய்வும் உள்ளடக்கப்படும்.

(iv) பொது வினாப் பத்திரம்- (பாட இலக்கம் 04).- அரசாங்க நிருவாகத்தின் இயல்புகள், அரசாங்க நிருவாகத்தின் கட்டமைப்பு, அரசாங்கத்தின் கொள்கைகளும் புதிய அரச மறுசீரமைப்பு, அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்) பாராளுமன்ற பொதுமக்கள் முறைப்பாட்டுச் செயற்குழு, அலுவலக கலாச்சாரம், தொழில்சார் ஒழுக்கங்களும், நல்லொழுக்கங்களும், அலுவலகத்திலுள்ள பௌதீக வளங்களைச் சிறந்த முறையில் வடிவமைத்தலும், ஊழியர் குழாத்தினரின் நலனோம்பல் செயற்பாடுகளும், பதவி அந்தஸ்து மற்றும் சிவில் அந்தஸ்து தொடர்பாக சமூக விஞ்ஞான ரீதியான அங்கீகாரம், சேவைபெறுநர்களுக்கு அரசாங்க அலுவலர்கள் மூலம் நிறைவேற்றப்படவேண்டிய கடமைகள் தொடர்பான பொது அறிவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

*4.* **தகைமைகள்**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகள் முழுமைப்படுத்தியிருத்தல் வேண்டும் :

**தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம்** :

(i) கிராம அலுவலர் I ஆந் தரத்துடைய அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ii) உரிய திகதிக்கு குறைந்தபட்சம் கிராம அலுவலர் II ஆம் தரத்தில் 08 வருடங்களுக்குக் குறையாத முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்திய கிராம அலுவலர் II ஆம் தரத்துடைய அலுவலராக இருத்தல் ;

அல்லது

(iii) குறைந்தபட்சம் கிராம அலுவலர் II ஆம் தரத்தில் 05 வருடங்களுக்குக் குறையாத முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைக் கொண்ட பட்டதாரியாக இருத்தல்.

**வேறு :**

(i) II ஆம் தரத்தின் வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் ;

(ii) உடன் முன்னரான (05) வருடங்களினுள் திருப்திகரமான சேவைக்காலம் அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை 01/2020 இற்கு ஏற்ப கணக்கிடப்படும் ;

(iii) பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக அவசியப்படும் தகைமைகளை விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- (i) 2010.09.29 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கிராம அலுவலர் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 14.1 இன் II ஆம் பிரிவின் கீழ் III ஆம் தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள, அவ்வாட்சேர்ப்பு நடைமுறையின் 10.1.1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய II ஆம் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்களின் முன்னைய II ஆம் தரத்தின் சேவைக்காலமும் உரிய சேவைக்காலமாகக் கருதப்படும்.

5. **சம்பள முறை**.-

(i) சம்பள குறியீட்டு இலக்கம் MN7 - 2016 (ரூ. 41,580.00 - 11× 755 - 18 × 1,030 - 68,425.00) (இச்சம்பள அளவுத் திட்டத்திற்கமைய சம்பள தயாரிப்பு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதிய ஏற்பாடுகள் இதற்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படும்.)

6. **விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் :**

- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திருக்கும் வகையில் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்வது அவசியமாகும். விண்ணப்பங்கள் A4 தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்துக் கொள்ளல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 05 வரை முதற் பக்கத்திலும், மீதமுள்ள பகுதிகளை அடுத்துவரும் பக்கங்களில் தயாரித்துக் கொள்ளவேண்டும். விண்ணப்பங்கள் கணனியினால் தயாரித்துக் கொள்ள முடியும் என்பதோடு, விண்ணப்பதாரிகள் தங்களது சொந்த கையெழுத்தில் இங்கு காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி நிவர்த்தியாகவும் தெளிவாகவும் பூரணப்படுத்துதல் வேண்டும்.
- விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.
- இரண்டு பிரதிகளைக் கொண்டதாக விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துதல் வேண்டும். ஒரு பிரதியை தமது பிரத்தியேகக் கோவையில் சேர்ப்பதற்காகப் பிரதேச செயலாளருக்கும், மூலப் பிரதி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கும் அனுப்புதல் வேண்டும்.
- சகல பரீட்சார்த்திகளும் தங்களது விண்ணப்பங்களைத் தான் சேவையாற்றும் பிரிவு உள்ளடங்கும் பிரதேச செயலாளர் ஊடாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு. என்ற முகவரிக்கு 2021, யூலை மாதம் 12 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கிராம அலுவலர் சேவையின் அதியுயர் தரத்தின் பதவியுயர்விற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021" என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பத்துடன் ஏதேனும் ஆவணங்களோ அல்லது அவற்றின் பிரதிகளையோ இணைத்தல் கூடாது. என்றாலும் தாங்கள் குறிப்பிடுகின்ற, அவ்வாறே தங்களின் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில், சமர்ப்பிப்பதற்காக தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 500.00 ஆகும். பரீட்சைக் கட்டணம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில், நாட்டின் எந்தவொரு தபாலகத்திலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரிலே பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டி, பற்றுச்சீட்டு இலக்கம், திகதி மற்றும் தபாலகம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியைத் தம் வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவ்வாறான விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

8. **பரீட்சைக்கு அனுமதித்தல்** :

- நிவர்த்தியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடைபெறும் திகதியை அறிவித்து அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரத்தை வழங்குதல் வேண்டும். பரீட்சை அனுமதிப் பத்திரம் இன்றிய பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை மண்டபத்தினுள் நுழையவோ பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டார்கள்.

- சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சைக்கு தோற்றும் முதல் தினத்திலே பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

- சகல பரீட்சார்த்திகளும் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள பரீட்சை சட்டதிட்டங்கள் தொடர்பில் அறிந்திருத்தல் வேண்டும் என்பதோடு அவற்றைப் பின்பற்றியொழுகுவதற்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

- பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள் அவர்களுக்கு கடமை லீவு வழங்குதல் வேண்டும்.

- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

  (i) தேசிய ஆளடையாள அட்டை;
  (ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
  (iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

(ii) **பரீட்சைப் பெறுபேறுகள்**.-
இவ்அறிவித்தலின் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுத்துப் போட்டிப் பரீட்சையில் ஒரு பாடத்தில் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளுக்கிடையே எழுத்துப் பரீட்சையில் காட்டும் திறமைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ள முன்னுரிமைப் பட்டியலின் படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் இணைத்துக் கொள்ளப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் அவ்வெற்றிட எண்ணிக்கையின் 25% ஆன அளவு என்ற இரண்டினதும் கூட்டுத்தொகைக்குச் சமனான விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைக் கொண்ட பட்டியல் செயலாளர், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் தபாலில் அனுப்பப்படும் அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

09. பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன், அது தொடர்பாக அறிவித்து பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடாத்தப்படும்

திகதிக்கு குறைந்தபட்சம் ஐந்து (05) நாட்களுக்கு முன்னர் தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நிவர்த்தியாகக் குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் பெக்ஸ் ஊடாக பரீட்சை பிரவேசப் பத்திர நிழற் பிரதியொன்றை அனுப்புவதற்காக விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்தின் ஊடாக பரீட்சை திணைக்களத்துக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயன்மிக்கதாகும். (பெக்ஸ் இலக்கம் - 011-2784232) அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பிரயோசனமாகும்.

ii. பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை கொண்டவர் எனக் கருதப்படமாட்டார்.

10. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதற்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளார்கள்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும். இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும்பொருத்தப்பாடின்மைமற்றும்ஒவ்வாமை இருப்பின் அவ்வாறன சந்தர்ப்பங்களில்சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

என். எச். எம். சித்ரானந்த,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு.

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,
"நில மெதுர", எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.
2021, யூன் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

**கிராம அலுவலர் சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவியுயர்விற்கான போட்டிப் பரீட்சை - 2021**

Limited Competitive Examination for the Promotion to Supra Grade of Grama Niladhari on Merit - 2021

(இலக்கம் 01 தொடக்கம் 05 வரை அதன் முதற் பக்கத்திலும், இலக்கம் 6 முதல் அடுத்துவரும் பக்கங்களிலும் தயாரித்துக் கொள்ள வேண்டும்.)

பரீட்சைக்குத் தோற்றும்
மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3

| |
|---|
| |

சேவையாற்றும் மாவட்டம் :
(அட்டவணை இலக்கம் 2 இற்கு எற்ப உரிய மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

| |
|---|
| |

மாவட்ட இலக்கம் :

| | |
|---|---|
| | |

பரீட்சைக்குத் தோற்றும் நகரம் :

| | |
|---|---|
| 1 | |
| 2 | |

நகர இலக்கம்

| | | |
|---|---|---|
| | | |
| | | |

(அட்டவணை இலக்கம் 01 இற்கமைய நகரம் மற்றும் நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

**1 ஆம் பகுதி**

(**கவனத்திற்கொள்ள வேண்டியவை**.- மாதிரிப் படிவத்தை சரியாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியின் கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும்)

1. (i) முழுப்பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA) :----.
(ii) இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் எழுதுக. (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : Gunawardana, H. M. S. K.) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. (i) அலுவலக முகவரி :----.
(ii) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்தில்) :----.

3. (i) பால்நிலை ஆண்/பெண்
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய கூட்டினுள் இலக்கமிடவும்)
(ii) பிறந்த திகதி :----.
வருடம் :........................ மாதம் :............................ திகதி :..........................

(iii) தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(iv) தொலைபேசி இலக்கம் : கையடக்க .......................... அலுவலக ......................

4. (i) கடமையாற்றும் பிரதேச செயலகப் பிரிவு : .................................
(ii) கிராம அலுவலர்ப் பிரிவு மற்றும் இலக்கம் : .................................

5. (i) தற்போது வகிக்கும் பதவியேற்ற திகதி / உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட திகதி மற்றும் கடிதம் அனுப்பப்பட்ட இலக்கம் :----.
(ii) மொத்த சேவைக்காலம் :-
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
(iii) தற்போதுள்ள தரம் :-
அத்தரத்தின் சேவைக்காலம் : வருடங்கள்:----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6. கிராம அலுவலர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட அலுவலராயின், அது தொடர்பான விபரம் :-
(குறித்த பந்தியை மாத்திரம் பூரணப்படுத்தவும்)

(i) விசேட சேவை அலுவலர் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி :----.
சேவைக் காலம் :----.

(ii) விவசாய அலுவலர் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி :----.
சேவைக் காலம் :----.

(iii) விவசாய விரிவாக்கச் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி :----.
சேவைக் காலம் :----.

(iv) அதற்குச் சமமான ஏனைய சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி :----.
சேவைக் காலம் :----.

7. நீங்கள் அரச கரும மொழிக் கொள்கை நோக்கத்தில் பழையவரா அல்லது புதியவரா? :----.

8. (i) சேவைக் காலத்தினுள் எல்லாச் சம்பள ஏற்றங்களையும் நீர் உழைத்துள்ளீரா? :----.
(ii) இல்லையெனில் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும் :----.

9. கூட்டுத்தாபனம் அல்லது மற்றொரு சேவைக்குச் சேவை நிமித்தம் நீங்கள் தற்சமயம் விடுவிக்கப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்:----.

10. நீர் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அல்லது மற்றொரு விடயத்துக்காகச் சம்பளமற்ற விடுமுறை பெற்றிருப்பின் அது குறித்த விவரங்களைக் குறிப்பிடவும் :----.

11. உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? அது தொடர்பான விவரங்களைக் குறிப்பிடவும் :----.

**கவனத்திற்கொள்ள வேண்டியவை**.- வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணமாக குறித்த தொகை செலுத்தப்பட்டு தபாலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை இங்கு கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும்.

| பற்றுச்சீட்டு கழராதவாறு இங்கே ஒட்டவும். |
|---|

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
பணம் செலுத்திய தபாலகம் :----.
தொகை (ரூபா) :----.
திகதி :----.

………………….. மேற்குறிப்பிட்ட தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும், சரியானதுமென, இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல் பிழையானது என கண்டறியப்பட்டால், இச் சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவியுயர்த்தல் தொடர்பாக எனது உரிமை கவனத்திற் கொள்ளாது விடுவதற்கும், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் முடியுமென நான் அறிந்துள்ளேன். என்பதோடு, அதற்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு நான் உடன்படுகின்றேன். பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் கட்டளைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கும் உடன்படுகின்றேன்.

----,
அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

**II ஆம் பகுதி**

**பிரதேச செயலாளரினால் நிரப்பப்படுதல் வேண்டும்**

(i) திரு./திருமதி/ செல்வி……………………………………… இனால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல் அவரின் பிரத்தியேகக் கோவையுடன் ஒப்பிட்டுப் பார்த்து அவை உண்மையானது எனவும் சரியானது எனவும்,
(ii) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும்,
(iii) அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதில்லை எனவும்,
(iv) உடன்முன்னரான ஐந்து வருடங்களினுள் அவரின் சேவை திருப்திகரமானதாக உள்ளதென்றும் ............. ஆந் திகதி முதல் கிராம அலுவலர் I ஆம் தரத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இவ் விண்ணப்பத்தின் பிரதிகள் உத்தியோகத்தரின் பிரத்தியேகக் கோவையுடன் இணைக்கப்படுவதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
பிரதேச செயலாளரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
உத்தியோகபூர்வ பதவி முத்திரை :----.
திகதி :----.
(ஏற்புடையதற்ற சொற்களை நீக்கவும்.)

**அட்டவணை - இலக்கம் 01**

**பரீட்சை நடாத்தப்படும் நிலையம்**

இப்பரீட்சை, கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். குறித்த நகரம் மற்றும் நகர எண் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தில் குறித்த தலைப்பு இந்நகரம் மற்றும் நகர எண் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கு ஏற்ப பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பித்த நகரம் / நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| நகரம் | நகர எண் |
|---|---|
| கொழும்பு | 001 |
| கண்டி | 002 |

| நகரம் | நகர எண் |
|---|---|
| காலி | 003 |
| யாழ்ப்பாணம் | 004 |
| மட்டக்களப்பு | 005 |
| குருநாகல் | 006 |
| அநுராதபுரம் | 007 |
| பதுளை | 008 |
| இரத்தினபுரி | 009 |

மேற்குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு பரீட்சை நிலையத்துக்கு போதுமானளவு பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை காணப்படாதவிடத்து அப்பரீட்சை நிலையத்தை இரத்துச் செய்து விட்டு, அதற்கு கிட்டிய பரீட்சை நிலையத்துக்கு குறித்த விண்ணப்பதாரிகள் அனுப்பப்படுவார்கள்.

மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் அல்லது பரீட்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு போதிய அளவு விண்ணப்பதாரிகள் காணப்படாத விடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**அட்டவணை - இலக்கம் -02**

மாவட்ட இலக்கப் பட்டியல்

| இலக்கம் | மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|---|
| 1 | கொழும்பு | 01 |
| 2 | கம்பஹா | 02 |
| 3 | களுத்துறை | 03 |
| 4 | கண்டி | 04 |
| 5 | மாத்தளை | 05 |
| 6 | நுவரெலியா | 06 |
| 7 | காலி | 07 |
| 8 | மாத்தறை | 08 |
| 9 | அம்பாந்தோட்டை | 09 |
| 10 | யாழ்ப்பாணம் | 10 |
| 11 | மன்னார் | 11 |
| 12 | வவுனியா | 12 |
| 13 | முல்லைத்தீவு | 13 |
| 14 | கிளிநொச்சி | 14 |
| 15 | மட்டக்களப்பு | 15 |
| 16 | அம்பாறை | 16 |
| 17 | திருகோணமலை | 17 |
| 18 | குருநாகல் | 18 |
| 19 | புத்தளம் | 19 |
| 20 | அநுராதபுரம் | 20 |
| 21 | பொலனறுவை | 21 |
| 22 | பதுளை | 22 |
| 23 | மொனராகலை | 23 |
| 24 | இரத்தினபுரி | 24 |
| 25 | கேகாலை | 25 |

## சுகாதார அமைச்சு

### மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர்களின் சேவைக்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்காக சுகாதார பட்டதாரிகள் ஆட்சேர்த்தல் - 2021

1. சுகாதார அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவையின் பின்வரும் வழிகாட்டல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிகளுக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பின்வரும் தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பதவிக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.-**

| குறியீட்டு இலக்கம் | வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு பாடநெறி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய பட்டம் |
|---|---|---|
| 1. | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | மருத்துவ இரசாயனவியலாளர் (B. Sc. MLS) |
| 2. | மருந்தாளர் | மருந்தாளர் (B. Phram)<br>விஞ்ஞானமானி (மருந்தாளர்) விஷேட (B. Sc. (Pharmacy) ) |
| 3. | கதிரியலாளர் | கதிரியல் சிகிச்சையாளர் (B. Sc. Radiotherapy)<br>கதிரியல் விஞ்ஞானமாணி (B. Sc. Radiography) |
| 4. | இயன் மருத்துவ சிகிச்சையாளர் | இயன் மருத்துவ சிகிச்சையாளர் (Bachelor in Physiotherapy)<br>விஞ்ஞானமாணி (இயன் மருத்துவ சிகிச்சையாளர்) (B. Sc. Physiotherapy) |
| 5. | தொழில் வழி சிகிச்சையாளர் | தொழில் வழி சிகிச்சையாளர் (Bachelor in Occupational Therapy)<br>விஞ்ஞானமாணி தொழில் வழி சிகிச்சையாளர் (B. Sc. in Occupational Therapy) |

(**குறிப்பு**.- விண்ணப்பதாரர் வெளிநாட்டில் பட்டம் பெற்றிருப்பவரெனின், அவர் உரிய பதவியில் இலங்கையில் கடமையாற்றும் பொருட்டு இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)

3. **ஏனைய பொதுத் தகைமைகள் :**

(அ) 2021.06.25 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) உரிய பட்டம் வலுவிற்கு வரும் திகதி விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக இருத்தல் வேண்டும்.

(இ) சிறந்த உடல், உள ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

4. **விண்ணப்பிக்கும் முறை:**

(அ) A4 அளவு கொண்ட கடதாசியை பயன்படுத்தி இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக (இலக்கம் 1 தொடக்கம் 09 வரை முதல் பக்கத்திலும், 10 தொடக்கம் 13 வரை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்குவதற்கு) விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தில் "பற்றுச்சீட்டு" எனும் இடத்தில் இலங்கை வங்கி, தப்பிரபேன், இல. 7041318 எனும் "சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் - பரீட்சைக்கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு ரூபா 500 இனை வரவு வைத்து பற்றுச்சீட்டை கழறாதவாறு ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டுவதற்கு முன் அதன் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளவும்)

(இ) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு அல்லது முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் செய்யக்கூடிய பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 3,93,684 இற்கு மேற்பட்ட வருட ஒன்றிணைந்த சம்பளம் பெறும் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலை தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் 9" × 4" அளவு கொண்ட கடித உறையில் இட்டு, அந்த கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிறைவுகாண் மருத்துவ சேவைக்கு பயிலுநர்களாக பட்டதாரிகளை

ஆட்சேர்த்தல் - 2021" எனவும் உரிய பட்டம் மற்றும் கல்வி ஆண்டு என்பவற்றைக் குறிப்பிட்டு 2021.06.25 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார அமைச்சு, சுவசிறிபாய, 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

5. அரசாங்க அல்லது அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் தங்களது விண்ணப்பங்களை தமது திணைக்கள தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது என்பதுடன், உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் இவ்வறிவித்தலுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. ஒவ்வொரு பயிற்சி நெறிகளுக்கும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பட்டதாரிகளில் பட்டம் வலுப்பெறும் திகதி (Effective Date) மற்றும் பட்டத்தின் தரத்திற்கான பொது மதிப்பீடு (GPA) அடிப்படையாகக் கொண்டு திறமைப்பட்டியல் தயாரித்து ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளும் பொருட்டு இதற்கு முன்பு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் இறுதித்திகதியான 2019.06.14 இற்கு பின்னர் பட்டம் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

8. வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான பட்டதாரிகள் விண்ணப்பித்திருப்பின் வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிக்கு ஆட்சேர்ப்பதற்கான பொது அறிவு மற்றும் உளச்சார்பு தொடர்பான 01 மணித்தியாலத்தைக் கொண்ட வினா பத்திரத்தைக் கொண்ட எழுத்துப்பரீட்சையொன்று நடாத்தி அப்பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் தொடருக்கமைய ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு சமமான எண்ணிக்கையினர் ஆட்சேர்க்கப்படுவார்கள். நேர்முகப்பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் அதன் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ்;
(2) பட்டச் சான்றிதழின் மூலப்பிரதி (இதன் சான்றுறுதி செய்த பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்);
(3) க. பொ. த. (சா/த) மற்றும் க. பொ. த. (உ/த) பரீட்சை பெறுபேறுகளின் மூலப்பிரதி;
(4) தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்;
(5) தாம் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2021.06.25 இற்கு கிட்டிய 03 வருடத்திற்கு தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். (வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழ் (கிராம அலுவலர் சான்றிதழ்- DS4)

9. **பயிற்சித் திட்டம்** :

I. நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படும் விண்ணப்பதாரிகளில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிகள் ஆங்கில மொழியில் தொடர்வதற்காக 06 மாத காலங்களுக்கு பயிற்சிக் கல்லூரிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

II. பயிற்சிப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படும் பயிலுநர்கள் பயிற்சிக் கல்லூரிகளில் நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களுக்கும் மற்றும் சுகாதார அமைச்சினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

III. பயிற்சியின் நிறைவில் பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்யாத அல்லது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமற்ற அல்லது தாம் உள்வாங்கப்பட்ட பயிற்சிப் பாடசாலையின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட தவறும் பயிலுநர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியை முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

IV. பயிற்சிக்காலத்தில் பயிலுநர்களுக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இன் விதிமுறைகளுக்கு அமைய கொடுப்பனவு வழங்கப்படும்.

V. பயிற்சிப்பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும்போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்த பட்சம் ஐந்து வருடங்கள் (05) உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். பயிற்சியின்போது பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை இடைநடுவில்

கைவிட்டால் அல்லது மேற்படி III ஆவது பந்தியின் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று ஐந்து (05) வருடங்கள் உரிய பதவியில் சேவை செய்வதற்கு தவறினால் பயிற்சிக்காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் ஒப்பந்தம் மற்றும் பிணைக்குரிய பணம் என்பன அவரினால் சுகாதார அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நியமங்கள்** : பயிற்சி முடிவில் பதவியில் நிரந்தர நியமனம் செய்தல்/ செய்யாமல் விடும் தீர்மானம் அச்சந்தர்ப்பத்தில் உள்ள பதவி வெற்றிட அளவினைப் பொறுத்ததாகும். அதன் பிரகாரம் உரிய பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்தால் விண்ணப்பதாரி பயிற்சி பெற்ற பாடநெறிக்கு குறித்த பயிற்சி நெறியின் நிபந்தனை மற்றும் வெற்றிடங்களின் அடிப்படையில் குறித்த பதவியில் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி குறியீட்டு இலக்கம் 1, 2, 3, 4, 5 என குறிப்பிடப்பட்ட நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவையின் அரச நிர்வாக சுற்றறிக்கை 6/2016 இன்படி, MT - 6 - 2016 இன் பிரகாரம் ரூபா 32,080.00 - 445×10 - 660×11 - 730× 10 - ரூபா 58,590.00 எனும் சம்பள அளவு உரித்தாகுவதுடன், கொடுப்பனவுகள் அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் விதிமுறைகளுக்கு அமைய வழங்கப்படும்.

11. விண்ணப்பத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும். பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபனமானால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச் செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரசாங்க சேவையில் இணையமுடியாதவாறு கருப்புப்பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் பிணைக்குரிய பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய பயிற்சி நெறியை தொடர்வதற்கும் மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை உறுப்படுத்துவதற்கு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். மருத்துவ பரிசோதனையின்போது தகுதியற்றவராக காணப்படுமாயின் விண்ணப்பதாரிகள் பயிற்சியைத் தொடர்வதற்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவார்.

13. மேற்படி இணைத்துக் கொள்ளப்பட்ட சகலரும் அரசாங்க ஊழியர்களுக்கான சகல சட்ட திட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் சட்டதிட்டங்களுக்கும், சுகாதார அமைச்சினால் தீர்மானிக்கப்படும் கொள்கைகள், நிதிப்பிரமாணம் மற்றும் ஏனைய சட்டதிட்டங்களுக்கும், அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் சட்ட திட்டங்கள், கட்டளைகள் என்பவற்றிற்கும் கட்டுப்படல் வேண்டும்.

14. பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சி கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்பட்டில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் மதிப்பீட்டு வாடகை, நீர் மற்றும் மின்சாரம் போன்றவற்றிற்கு கட்டணம் அறவிடப்படும்.

15. பயிற்சிக்கு இணைத்தல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடுகள் எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே சரியானது எனக்கொள்ளப்படும்.

வைத்தியர் எஸ். எச். முனசிங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
'சுவசிறிபாய',
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2021, யூன் 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவைக்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிக்காக பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு - 2021**

விண்ணபத்தை நிரப்புவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக வாசிக்கவும்.

| பயிற்சி நெறிக்குரிய குறியீட்டு இலக்கம் (வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம்) |
|---|
| |

* விண்ணப்பிக்கும் பாடநெறி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

* விண்ணப்பிக்கும் பாடநெறி (ஆங்கிலத்தில்) :-----.

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ+ம் :- A. B. C. SILVA )

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2. தேசிய ஆளடையாள அட்டை இல. :----. (பிரதியொன்றை இணைக்கவும்)

3. தபால் முகவரி :

| | சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|---|
| | ----------------- | ------------- |
| | ----------------- | ------------- |
| | ----------------- | ------------- |

4. (அ) நிரந்தர முகவரி :

| | சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|---|
| | ----------------- | ------------- |
| | ----------------- | ------------- |
| | ----------------- | ------------- |

(ஆ) தொலைபேசி இலக்கம் :

கையடக்க: | | | | | | | | | | |   நிலையான: | | | | | | | | | | |

(இ) வதிவிட மாவட்டம் : சிங்களத்தில்/தமிழில் :----. ஆங்கிலத்தில் :----.

(ஈ) நீங்கள் இம்மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமுடையவரா? ஆம்/இல்லை :----.

(உ) ஆம் எனின், எவ்வளவு காலத்திலிருந்து :----.

5. பிறந்த திகதி : ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.
2021.06.25 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6. பால் : ஆண்: ☐ பெண்: ☐ (உரிய கூட்டில் "✓" எனும் குறியீட்டை இடவும்)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா? ஆம்: ☐ இல்லை: ☐ (உரிய கூட்டில் "✓" எனும் குறியீட்டை இடவும்)

8. விவாக நிலைமை : விவாகமானவர்: ☐ விவாகமாகாதவர்: ☐

9. கல்வித் தகைமைகள் :

| குறியீட்டு இல. | சித்தியடைந்த பட்டம் | தரம் | தரத்தின் பொது மதிப்பீடு (GPA) மற்றும் பட்டம் செல்லுபடியாகும் திகதி | பல்கலைக்கழகம் | கல்வியாண்டு | போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் மொழி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

10. நீங்கள் ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா? ஆம் : ☐ இல்லை : ☐
(பொருத்தமான கூட்டில் "✓" குறிப்பிடுக.
ஆம் எனில் காரணத்தைக் குறிப்பிடுக :-

-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) என்னால் இந்த வர்த்தமானி அறிவித்தலை வாசித்து தெளிவு பெற்று அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு இவ்விண்ணப்பப்பத்திரம் நிரப்பப்பட்டதென்றும் நான் வேறு எந்தவொரு முழுநேர பாடநெறியில் ஈடுபடவில்லை என்றும் இவ் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) இங்கு என்னால் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென அல்லது தவறு எனக் காணுமிடத்து நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என நான் நன்கறிவேன்.

இலங்கை வங்கி, தபரோபேன் கிளையில், இல. 7041308 எனும் கணக்கிற்கு "சு. சே. ப. நா. பரீட்சைக்கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு உரிய பணத்தை செலுத்தி அந்த பற்றுச்சீட்டை கழராத விதத்தில் இங்கு ஒட்டவும்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .......................... அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் பரிச்சயமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் ........... ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையுடன்)

திகதி :----.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

13. **விண்ணப்பதாரி அரச ஊழியராயின்/ மாகாண அரச சேவையில் ஊழியராயின் திணைக்கள தலைவரின் உறுதிமொழி : (பொருத்தமற்றவற்றை வெட்டிவிடவும்)**

(i) மேற்படி விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ................ அவர்கள் இத்திணைக்களத்தில் .............. பதவி வகிக்கின்றார் என உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துவதுடன், இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

திணைக்களத் தலைவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :----.
திணைக்களத் தலைவரின் பதவி முத்திரை :-----.

06-246

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம் /தமிழ்) (சிங்களம் /ஆங்கிலம்) (தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப் படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2021 இற்கு தோற்றுவதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சையானது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இப்பரீட்சையினை ஒத்தி வைப்பதற்கான அல்லது செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2. **சேவை நிபந்தனைகள்.-**

2.1 அரசாங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க மற்றும் 11.09.2018 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக்குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ் / ஆங்கிலம்) தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

2.2 இந்நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ் / ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு 05 வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

2.3 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் / அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2.4 அரசாங்க நிர்வாக சுற்றுநிரூபம் 01/2014 இற்கு மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் 396 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது போல அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைப்பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்குரிய அரசாங்க மொழித் தேர்ச்சியினை சேவைக்கு உள்வாங்கப்பட்டு 05 வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. **சம்பளம்** : 03/2016 மற்றும் அதற்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 24.06.2016 ஆம் திகதிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைப்பெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ் / ஆங்கிலம்) தரம் III இற்குரிய (MN 2 -2016 ) ரூபா 28,940 - 10 × 300 - 11 × 350 - 10 × 560 - 10 × 660 - ரூபா 47,990 (ஆரம்ப சம்பளம் ரூபா 28,940) ஆகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது.

5. **தகைமைகள்**.- அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ் / ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித்திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 32 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(இ) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(ஈ) அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் சகல அபேட்சகர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
(உ) கீழ்வரும் கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. தமிழ், சிங்களம், ஆங்கில மொழி /ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

II. கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே தடவையில் மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும்.)

III. ஏனைய சர்வதேச மொழிகளில் கொண்டிருக்கும் அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 12.07.2021 ஆந் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

6. **பரீட்சை நடபடிமுறைகள்.**-

இப்பரீட்சையானது மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | வினாப்பத்திரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | மொழித்திறன் | 100 | 40 |
| 02. | உளச்சார்பு | 100 | 40 |
| 03. | மொழிபெயர்ப்பு | 100 | * |

(* வெற்றிடங்களின் எண்ணிக்கையினை கருத்திற் கொண்டு மொழிபெயர்ப்புப் பரீட்சையில் சித்திபெற வேண்டிய புள்ளி மட்டமானது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.)

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தாம் விரும்பிய ஒரு மொழியை மாத்திரம் தெரிவு செய்ய முடியும்.

விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாத்திரமே "மொழித்திறன்" மற்றும் "உளச்சார்பு" வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும்.

மொழிபெயர்ப்பு வினாப்பத்திரங்களுக்கு தாம் விண்ணப்பிக்கும் பிரிவுக்குரிய வினாப்பத்திரத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். கடமை நிமித்தம் விண்ணப்பதாரிக்குள்ள தகைமைகள் மற்றும் திறன்களை பரீட்சிக்கும் நோக்கில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

**பரீட்சைக்கான பாடத்திட்டம்.**-

| | வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 01 | மொழித் திறன் | இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்தியின் கருத்து தெரிவித்தல், கிரகித்தல், எழுத்தறிவு, மொழி மற்றும் கட்டுரை, கடிதம் ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக வரைபுகள் மற்றும் அட்டவணைகள் தயாரித்தல், சுருக்கம் எழுதுதல், தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கண பயன்பாடு தொடர்பிலான அறிவை பரீட்சிக்கும் விடயரீதியான வினாக்களைக் கொண்டதாகும். |
| 02 | உளச்சார்பு | இவ்வினாப்பத்திரமானது பரீட்சாத்தியின் எண் சார்ந்த திறன், தர்கிக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றை அளவிடும் வகையிலான விடயப்பரப்பிற்குரிய வினாக்களைக் கொண்டதாக அமையும். |
| 03 | மொழிபெயர்ப்பு | சிங்களம்/ஆங்கில மொழிக்கு<br>ஆங்கிலம்/சிங்கள மொழிக்கு |
| | | சிங்களம்/தமிழ் மொழிக்கு<br>தமிழ்/சிங்கள மொழிக்கு |
| | | தமிழ்/ஆங்கில மொழிக்கு<br>ஆங்கிலம்/தமிழ் மொழிக்கு |

**குறிப்பு** : அனைத்து எழுத்து மூல விடைப்பத்திரங்கள் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். இவ்வினாப்பத்திரங்கள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்பு ரீதியான கட்டுரை வினாக்கள் மற்றும் செய்முறை வினாக்களைக் கொண்டவையாகும்.

7. பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளில், உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து கீழ்நோக்கிய புள்ளி ஒழுங்கினை பின்பற்றி, தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர்

அப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படலாம். எவ்வாறெனினும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் குறித்த வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்பாமல் இருப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்படலாம்.

**பரீட்சை பெறுபேறுகள்**.- நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் பரீட்சை பெறுபேறுகள் அனுப்பப்படும்.

8. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை** .- விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பாக பொய்யான தகவல்களை வழங்கியுள்ளமை அல்லது வேண்டுமென்றே உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் பகிரங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்.

9. **பரீட்சைக் கட்டணம்** .- பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். இக்கட்டணத்தை "நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்" பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட வைப்புச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் அகற்ற முடியாத வகையில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாததுடன் காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

10. **விண்ணப்பிக்கும் முறை**.-

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், 8 ½" x 12" (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் உள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா என விண்ணப்பதாரி தேடிப்பார்த்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபாலில் 2021, யூலை 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம், கொழும்பு 12" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைப்பெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ் / ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2021" என்பதனை தெளிவாக எழுத வேண்டும். 2021, யூலை 12 ஆந் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(இ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொலிஸ் சேவையில் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்திற்குரிய உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிலிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

*11.* **பரீட்சைக்கு தோற்றல்** - விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால் நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும். அதன் போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிடவேண்டும். கொழும்பிற்கு வெளியே வதியும் விண்ணப்பதாரிகள் எனின் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியினை பெற்றுக்கொள்வதற்காக உங்களது தொலைநகல் இலக்கம் மற்றும் மேற்குறிப்பிட்ட விபரங்களையும் உள்ளடக்கிய கோரிக்கை கடிதமொன்றை 0112 421 206 அல்லது 0112 446 111 இலக்கங்களுக்கு அனுப்புவதுடன் அது தொடர்பில் விசாரித்தல் பயன்மிக்கதாக இருக்கும். மேலும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு விண்ணபதாரியிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பயன்மிக்கதாய் அமையும்.

*12.* பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம் - பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோன்றும் எல்லா விடயதானங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

*13.* **பரீட்சைக்கு தோற்றுதல்**.-

(அ) எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டை வழங்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தங்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை, கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சைக்கு தோற்றும் முதலாம் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சாத்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்டவிதிகளை மீறினால் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

*14.* இவ் ஒழுங்குவிதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின் அவ்விடயங்கள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

*15.* இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2021, யூலை .

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம் /தமிழ்) (சிங்களம் /ஆங்கிலம்) (தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021

☐

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. மொழி
பரீட்சைக்கு தோற்றும் மொழி
சிங்களம் -1 ☐
தமிழ் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் "✓" இடவும்.)

02. விண்ணப்பிக்கும் உரைபெயர்ப்பாளர் பதவி
சிங்களம்/தமிழ்
சிங்களம் /ஆங்கிலம் ☐
தமிழ் /ஆங்கிலம்
(உரிய கூட்டினுள் "✓" இடவும்.)

03. பிரத்தியேக தகவல்கள் :

3.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி ........................................................................ ............................
..................................................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்) உதாரணம் : SRIWARDANA, A.P.K.

3.2 முழுப்பெயர் : ..................................................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்)

3.3 முழுப்பெயர் : ..................................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

3.4 பிரத்தியேக முகவரி : ........................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

3.5 பிரத்தியேக முகவரி : ........................................................................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்)

3.6 வசிக்கும் மாவட்டம் : ........................................................................................................

3.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.8 பிறந்த திகதி : .....................................

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.9 2021.07.12 திகதிக்கு வயது

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.10 பால் நிலை : ஆண் - 1 பெண் - 2 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

3.11 சமூக அந்தஸ்த்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2 ☐ (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

3.12 தொலைபேசி இலக்கம் :

நிலையானது : ......................... கையடக்க தொலைபேசி : ...............

தொலைநகல் : .....................

04. கல்வித் தகைமைகள் :

4.1 க.பொ.த. (சா./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள்:

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................

(2) பரீட்சை சுட்டெண் : ............................

(3) பெறுபேறுகள் :

| விடயம் | தரம் | விடயம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க.பொ.த. (உ./த.) பரீட்சை தொடர்பான பெறுபேறுகள் :

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................

(2) பரீட்சை சுட்டெண் : ............................

(3) பெறுபேறுகள் :

| விடயம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

4.3 வேறு சர்வதேச மொழி தொடர்பான தகைமைகள் :

| சர்வதேச மொழி | தகைமை | தகைமை பெற்ற நிறுவனம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

05. வேறு தகைமைகள் : ..........................................................................................................................................

06. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?
(உரிய கூட்டினுள் ( √ ) அடையாளமிடுங்கள்), (ஆம் எனின், விபரங்களை குறிப்பிடுக.)

.......................................................................... ஆம் : ☐ இல்லை : ☐

..........................................................................

07. பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

பரீட்சைக்கட்டணம் செலுத்திய வங்கி : ...................................

பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : .....................................

செலுத்திய பணம் : ...................................

| பற்றுச்சீட்டினை அகற்ற முடியாதவாறு ஒட்டவும். |
|---|

*08.* **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதும் என தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் யாதேனும் பகுதிகள் நிரப்பப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக நிரப்பப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை தாங்கிக் கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் அனைத்து பகுதிகளும் சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் முடியும் என்பதனை நன்கறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவதுடன் தொடர்புடையதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கு நான் கீழ்படிகின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

.................... ......................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

*09.* **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-**

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ............................. என்பவரை நான் பிரத்தியோகமான முறையில் நன்கறிவேன் என்பதனையும், எனது முன்னிலையில் …………………….. திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டினை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................. .............................................

திகதி கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ………………………..
பதவி : …………………………………………………
முகவரி : ………………………………………………
(உத்தியோகப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)

***திணைக்களத் தலைவரின் விதந்துரை (தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)***

இந் ………………………………………... சேவையாற்றும் திரு/திருமதி/செல்வி ………………………என்பவருக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) (சிங்களம்/ஆங்கிலம்) (தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான கல்வித் தகைமைகளை கொண்டுள்ளார் என்பதனையும், விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் அவர் 12.07.2021 ஆந் திகதிக்கு 32 வயதிற்கு மேற்படாதவர் என்பதனையும், அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் தெரிவித்து, விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை விதந்துரை செய்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

திகதி :........... ................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
உத்தியோகப்பூர்வ முத்திரை :-

06-244

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.